சிபிஎஸ்இ +2 தேர்வில் 490 மார்க்: நாமக்கல் லாரி டிரைவரின் மகளுடன் பேசிய மோடி மனம் திறந்த பாராட்டு

‘கனவில் கூட எதிர்பார்க்கவில்லை’: குடும்பமே இன்ப அதிர்ச்சி

புதுடெல்லி, ஜூலை 27–

நாமக்கல்லில் +2 தேர்வில் 500க்கு 490 மார்க் எடுத்து சாதனை படைத்திருக்கும் லாரி டிரைவரின் மகள் கனிகாவுடன் கலந்துரையாடிய பிரதமர் மோடி, அவருக்கு இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து பாராட்டினார்.

இது குறித்து மாணவி கனிகா பேசுகையில்,

நாட்டின் பிரதமர் என்னை பாராட்டுவார் என நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் மனதின் குரல் நிகழ்ச்சி வாயிலாக பிரதமர் மோடி என்னை பாராட்டியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது. இதை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன். அதே நேரத்தில் பிரதமரின் பாராட்டு இன்னும் பல சாதனைகளை படைக்க ஊக்கம் தருவதாக இருக்கிறது. எதிர்காலத்தில் நான் டாக்டருக்கு படித்து நரம்பியல் நிபுணராகி சேவை செய்ய விரும்புகிறேன்’ என்றார்.

இது குறித்து மாணவியின் தந்தை நடராஜன் கூறும்போது, ‘நான் கனவில் கூட இதை எதிர்பார்க்கவில்லை. நாட்டின் பிரதமர் எனது மகளை பாராட்டி இருப்பது எங்கள் குடும்பத்திற்கு மட்டும் இன்றி, நாமக்கல் மாவட்டத்திற்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது’ என்றார்.

மாணவி கனிகா 10ம் வகுப்பில் 500க்கு 475 மதிப்பெண்கள் பெற்று இருந்தார். இவரது சகோதரி சிவானி திருச்சியில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரி ஒன்றில் 2ம் ஆண்டு படிப்பை நிறைவு செய்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாமக்கல்லில் பரமத்தி சாலையில் உள்ள இ.பி.காலனியை சேர்ந்தவர் நடராஜன். லாரி டிரைவர். இவரது மனைவி ஜோதி. இவர்களுக்கு சிவானி, கனிகா என்ற 2 மகள்கள் உள்ளனர்.

நாமக்கல் கிரீன்பார்க் சி.பி.எஸ்.இ. பள்ளியில் பிளஸ்2 தேர்வு எழுதிய மாணவி கனிகா நடந்து முடிந்த தேர்வில் 500க்கு 490 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தார். இந்த நிலையில் நேற்று வானொலியில் மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் மோடி, லாரி டிரைவர் நடராஜனின் மகள் கனிகாவுக்கு பாராட்டு தெரிவித்தார்.

அவர்கள் உரையாடலின் சுருக்கம் வருமாறு:–

பிரதமர் மோடி: கனிகா ஜி, வணக்கம்.

கனிகா: வணக்கம் சார்.

பிரதமர்: எப்படி இருக்கிறீர்கள்?

கனிகா: நலமாக இருக்கிறேன் சார்.

பிரதமர்: அதிக மதிப்பெண் பெற்ற உங்களுக்கு வாழ்த்துகள்.

கனிகா: நன்றி சார்.

மோடி: நாமக்கல் பெயரை கேட்டவுடன், எனக்கு ஆஞ்சநேயர் கோவில் தான் நினைவுக்கு வரும். இனிமேல், உங்களுடன் பேசியதும் நினைவுக்கு வரும். தேர்வுக்கு கஷ்டப்பட்டு படித்து இருப்பீர்கள். அந்த அனுபவம் எப்படி இருந்தது?

கனிகா: சார், ஆரம்பத்தில் இருந்தே கஷ்டப்பட்டு படித்தேன். ஆனால் 490 மதிப்பெண்ணை எதிர்பார்க்கவில்லை. 485 அல்லது 486 வரை எதிர்பார்த்தேன்.

மோடி: உங்கள் பெற்றோர், ஆசிரியர்களின் மனநிலை எப்படி இருந்தது?

கனிகா: மிகவும் சந்தோஷப்பட்டனர். பெருமைப்பட்டனர்.

மோடி: உங்களுக்கு பிடித்தமான பாடம்?

கனிகா: கணிதம்.

மோடி: உங்கள் எதிர்கால திட்டம்?

கனிகா: டாக்டராக விரும்புகிறேன்,

அக்கா எம்.பி.பி.எஸ். படிக்கிறாள்

மோடி: உங்கள் பெற்றோரும் மருத்துவ துறையில் இருக்கிறார்களா?

கனிகா: இல்லை சார். அப்பா, ஒரு டிரைவர். என் அக்காள்தான் எம்.பி.பி. எஸ். படித்துக் கொண்டிருக்கிறார்.

மோடி: உங்கள் அப்பா நல்ல காரியம் செய்திருக்கிறார். அவர் எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருக்கிறார். உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் வாழ்த்துகள்.

கொரோனா: குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியை தாண்டியது

ஜெனீவா, ஜூலை 27–

சீனாவின் உகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது உலகின் 215 நாடுகளுக்கு மேல் இந்த வைரஸ் பரவியுள்ள உள்ளது.இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியைத் தாண்டியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியே 63 லட்சத்தை தாண்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 6 லட்சத்து 51 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 66 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இலவச முக கவசம்...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா தரமான மறு பயன்பாட்டு முகக்கவசங்கள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 2.08 கோடி குடும்ப அட்டைதாரர்களின் 6.74 கோடி குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு விலையில்லா தரமான மறு பயன்பாட்டு முகக்கவசங்கள் நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கும் வகையில், முதற்கட்டமாக பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) வசிக்கும் 69.09 லட்சம் குடும்பங்களுக்கு 4.44 கோடி விலையில்லா தரமான மறு பயன்பாட்டு முகக்கவசங்கள் 30 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் முகக்கவசங்கள் வழங்கும் திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் ஆர்.காமராஜ், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் க.சண்முகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, வருவாய் நிருவாக ஆணையர், முதன்மைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, பேரிடர் மேலாண்மை ஆணையர் டி.ஜகந்நாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் 14 லட்சத்தை கடந்தது கொரோனா பாதிப்பு

புதுடெல்லி, ஜூலை 27–

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. அதேசமயம் குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில், இன்று காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி,

இந்தியாவில் கொரோனா பாதிப்பு 14 லட்சத்தை கடந்துள்ளது. மொத்தம் 14,35,453 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 49,931 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 708 பேர் மரணம் அடைந்துள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 32,771 ஆக உயர்ந்துள்ளது.

9,17,568 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 4,85,114 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மகாராஷ்டிராவில் கொரோனா பாதிப்பு 3.75 லட்சமாக உயர்ந்துள்ளது. இதுவரை 3,75,799 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

2,13,238 பேர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர். 13,656 பேர் மரணம் அடைந்துள்ளனர். தமிழகத்தில் 2,13,723 பேருக்கும், டெல்லியில் 1,30,606 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இடஒதுக்கீடு வழங்க தடை இல்லை...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கீடு தர உச்சநீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும் என்ற இந்திய மருத்துவ கவுன்சிலின் வாதத்தை ஏற்க முடியாது.

இட ஒதுக்கீடு வழங்க, விரைவாக மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட முடிவு என்பதால் தற்போதைய நிலை கருதி சட்டம் இயற்ற வேண்டும் என்றும் கூறினர்.

இட ஒதுக்கீடு கோர ஓ.பி.சி., பிரிவினருக்கு உரிமை உள்ளது. அவர்களுக்கான இட ஒதுக்கீட்டை மறுக்க முடியாது. வழங்க எந்த தடையும் இல்லை. குறைந்தபட்ச கல்வி தகுதியை மத்திய அரசும், மருத்துவ கவுன்சிலும் தீர்மானிக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் மருத்துவ கவுன்சிலுடன் ஆலோசித்து இட ஒதுக்கீடு குறித்து முடிவெடுக்க வேண்டும்.

மாநில அரசுகளுடன் ஆலோசித்து, மத்திய அரசு 3 மாதங்களில் முடிவை அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, N.S.Udhaya Kumar, S/o. G.S.Raju, aged 32 years, permanently residing at No.181/24, 2nd Street, Union Carbide Colony, Kodungaiyur, Chennai –600 118. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

N.S.Udhaya Kumar

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, M.Muthuswamy, S/o. S.Muthaiya, aged 39 years, permanently residing at No.40/23, 1st Street, B.V.Colony, Vyasarpadi, –600 039. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

M.Muthuswamy

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, K.Priyanka, D/o. G.Krishnan, aged 24 years, permanently residing at No.43/81, 1st Street, Patel Nagar, Tondiarpet, Chennai –600 081. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

K.Priyanka

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, K.Pavithra, D/o. K.Karunakaran, aged 23 years, permanently residing at No.9/17, 4th Street, Pudur, Ashok Nagar, Chennai –600 083. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

K.Pavithra

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, A.Tamil Selvan, S/o. C.Alvar, aged 23 years, permanently residing at No.42, Bajanai Kovil Street, Vengathur Village, Manavalanagar Post, Thiruvallur Dist –602002, Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

A.Tamil Selvan

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, Swetha.J, D/o. Jayaraman.C, aged 25 years, permanently residing at No.1/142, Chitty Babu Street, Kundrathur Road, Periyapanichery, Chennai –600122, Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

Swetha.J

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, D.Jeevitha, D/o. R.Dhanagopal, aged 25 years, permanently residing at No.625/2, Madhurakali Amman Koil Street, Cidhamanikuppam, Alapakkam Post, Cuddalore –608 801. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

D.Jeevitha

******

After 10 days of the publication of this notice and within three months there after. I, K.P.Uddish, S/o. K.Pasupathy, aged 22 years, permanently residing at Plot No.5, Sivagami Nagar 1st Street, Koratoor North, Chennai –600076, Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

K.P.Uddish

******

(expleo)

எக்ஸ்பிளியோ சொல்யூஷன்ஸ் லிமிடெட்

(முன்னர் எஸ்க்யூஎஸ் இந்தியா பிஎப்எஸ்ஐ லிமிடெட்)

பதிவு அலுவலகம்: 6ஏ, 6–வது தளம், பிரின்ஸ் இன்போசிட்டி II, எண். 283/3 மற்றும் 283/4, ராஜீவ் காந்தி சாலை (OMR), கந்தன்சாவடி, சென்னை–600 096. இந்தியா • Phone:+ 91 44 43923200 • Website: www.expleosolutions.com • CIN : L64202TN1998PLC066604

கம்பெனி உறுப்பினர்களின் கவனத்திற்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பது யாதெனில்,

கம்பெனியின் உறுப்பினர்களுக்கான 22வது வருடாந்திர பொதுக்கூட்டமானது (“22nd AGM”) காணொலி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலம் கார்ப்பரேட் விவகாரங்கள்துறை அமைச்சகம் (MCA)ஆல் வெளியிடப்பட்ட மே 5, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.20/2020, ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, மேலும் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.17/2020 (கூட்டாக “MCA சுற்றறிக்கைகள்” என குறிப்பிடப்படும்) மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (SEBI)ஆல் மே 12, 2020 தேதியிடப்பட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 அனைத்து பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 ஆகியவற்றின் கீழ் **ஆகஸ்ட் 27, 2020, வியாழக்கிழமை அன்று இந்திய நேரப்படி மாலை 3.30 மணிக்கு** நடைபெறும்.

இது தொடர்புடைய மேற்கண்ட சுற்றறிக்கைகளின்படி, மின்னணு வடிவிலான வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2019-20-ஆம் நிதி ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனி/வைப்பு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்களை அவர்களுடன் தொடர்புடைய வைப்பு பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் அவர்களின் மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்களை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் மின்னஞ்சல் முகவரியான investor@cameoindia.com-க்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 22வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை கம்பெனியின் இணையதளமான www.https://expleogroup.com/expleo-solutions/financial/ மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சஸ் இணையதளங்களான பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் தேசிய ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் (www.nseindia.com) மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் ("CDSL") (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும்போது மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்கும் ஏஜென்சி) ஆகிய இணையதளங்களில் கிடைக்கும்.

உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் VC/ OAVM முறையில் பங்கேற்பது மற்றும் தொலைதூர மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக பங்கேற்பது அல்லது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும்போது மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள், மின்னணு வடிவில் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 103-ன் கீழ் VC/ OAVM மூலம் குறைந்தபட்ச உறுப்பினர்கள் பங்கேற்றிருக்கிறார்களா என்பது குறித்து கணக்கிடப்படும்.

மேற்குறிப்பிட்ட எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, மேற்கண்ட விவரங்கள், கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களின் தகவல்களுக்காக, அவர்கள் பயன்பெறுவதற்காகவும் வெளியிடப்பட்டுள்ளது.

குழு உத்தரவுப்படி
எக்ஸ்பிளியோ சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
(முன்னர் எஸ்க்யூஎஸ் இந்தியா பிஎப்எஸ்ஐ லிமிடெட்)
பாலாஜி விஸ்வநாதன்
நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி

இடம் :சென்னை
தேதி : ஜூலை 27, 2020

TMS தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

CIN: - L17111TZ1977PLC000776

பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்–636 302.

30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

வ. எ ண்		விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.06.2019 (தணிக்கை யாகாது)	முடிந்த காலாண்டு 30.06.2020 (தணிக்கை யானது)	முடிந்த காலாண்டு 31.03.2020 (தணிக்கை யானது)	முடிந்தத ஆண்டு 31.03.2020 (தணிக்கை யானது)
1.	ஏ)	செயல்பாடுகளிலிருந்து வருமானம்	49.75	30.62	44.57	191.25
	பி)	இதர வருமானம்	1.12	1.18	–	1.30
		மொத்த வருமானம்	**50.87**	**31.80**	**44.57**	**192.55**
2.		செலவுகள்				
	ஏ)	கச்சா பொருட்கள் உபயோகம்	–	–	–	–
	பி)	வர்த்தக பொருட்கள் வாங்கியது	–	–	–	–
	சி)	முடிக்கப்பட்ட பொருட்களின் சரக்குகளில் மாற்றங்கள் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் வர்த்தக இருப்பு	–	–	–	–
	டி)	ஊழியர் நல செலவுகள்	12.45	8.70	10.93	58.05
	இ)	நிதி செலவுகள்	39.50	49.05	61.70	181.71
	எப்)	தேய்மானம் மற்றும் அமார்டைசேஷன் செலவுகள்	16.23	15.82	17.71	63.27
	ஜி)	மற்ற செலவுகள்	17.68	23.92	5.86	87.09
		மொத்த செலவுகள்	**85.86**	**97.49**	**96.20**	**390.12**
3.		நிதி கட்டணங்களுக்கு பின் ஆனால் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் சாதாரண செயல்பாடுகள் மூலம் லாபம்/ (நஷ்டம்) (1–2)	(34.99)	(65.69)	(51.63)	(197.57)
4.		விலக்கு அயிட்டங்கள்	–	–	–	–
5.		சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் லாபம்(+)/ நஷ்டம் (3–4)	(34.99)	(65.69)	(51.63)	(197.57)
6.		வரி செலவுகள்	–	–	–	–
7.		சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு பின் நிகர லாபம்(+)/நஷ்டம்	(34.99)	(65.69)	(51.63)	(197.57)
8.		இதர விரிவான வருமானம்				
	i)	அயிட்டங்கள் லாபம் மற்றும் நஷ்ட கணக்கில் மறுவகைபடுத்தப்படவில்லை	–	–	–	–
	ii)	வருமான வரி தொடர்பான அயிட்டங்கள் லாபம் மற்றும் நஷ்ட கணக்கில் மறுவகைப்படுத்தப்படவில்லை	–	–	–	–
	i)	அயிட்டங்கள் லாபம் மற்றும் நஷ்ட கணக்கில் மறுவகைபடுத்தப்பட்டுள்ளன	–	–	–	–
	ii)	வருமான வரி தொடர்பான அயிட்டங்கள் லாபம் மற்றும் நஷ்ட கணக்கில் மறுவகைபடுத்தப்பட்டுள்ளன	–	–	–	–
9.		காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (7+8)	(34.99)	(65.69)	(51.63)	(197.57)
10.		செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒன்று ரூ. 10/–)	576.28	576.28	576.28	576.28
11.		பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி மறுமதிப்பீட்டு நீங்கலாக இதர ஈக்விடி	–	–	–	–
12.		ஒரு பங்கு சம்பாத்தியம் (முகமதிப்பு ஒன்றுக்கு ரூ. 10–) (வருடாந்திரமல்ல) அடிப்படை மற்றும் டைலூட்டட்	(0.61)	(1.14)	(0.90)	(3.43)

★ எது பொருந்தவில்லையோ அதனை அடித்துவிடவும்.

குறிப்புகள்:
1. கம்பெனி குத்தகை வாடகை வருமானம் என்ற ஒரே பகுதியாக செயல்படுகிறது. எனவே தனி அறிக்கை தேவையில்லை.
2. 30.06.2020 அன்று முதலீட்டாளர் புகார் குறித்த நிலை:
காலாண்டு துவக்கத்தில் நிலுவை: இல்லை. காலாண்டில் தீர்க்கப்பட்டது: இல்லை,
காலாண்டில் டிஸ்போஸ் செய்யப்பட்டது: இல்லை, தீர்க்கப்படாமல் உள்ளது : இல்லை.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கு கடந்த காலாண்டு/ஆண்டு முடிவுகள் ரீகுரூப் செய்யப்பட்டுள்ளன.
4 மேற்கண்ட முடிவுகள் 24 ஜூலை, 2020 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
5 கோவிட் – 19 தொற்று காரணமாக வருவாய் குறைவு உள்பட பல்வேறு இடர்பாடுகளையும் எங்களது கம்பெனி சந்தித்து வருகிறது.

ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

		விவரங்கள்	30.06.2020	31.03.2020
		ஆஸ்திகள்		
(1)		நடப்பு சாரா ஆஸ்திகள்		
	ஏ.	சொத்து, நிலம் மற்றும் இயந்திரங்கள்	1,108.99	1,126.56
	பி.	நடைபெற்று வரும் மூலதன வேலை	55.20	55.20
	சி.	இதர இன்டேஜிபிள் ஆஸ்திகள்	0.43	0.58
	டி.	நிதி ஆஸ்திகள்		
		i) முதலீடுகள்	–	–
		ii) கடன் மற்றும் முன் பணங்கள்	9.35	9.35
		iii) இதர நடப்பு சாரா ஆஸ்திகள்	10.96	10.96
	இ.	ஒத்தி வைக்கப்பட்ட வரி ஆஸ்தி (நிகரம்)	58.10	58.10
(2)		நடப்பு ஆஸ்திகள்		
	ஏ.	பொருள் விவரப் பட்டியல்	–	–
	பி.	நிதி ஆஸ்திகள்		
		i) பணம் மற்றும் பணத்திற்கு இணையானவை	31.84	28.55
		ii) வர்த்தகம் பெறுதல்கள்	263.28	252.69
		iii) மற்றவைகள்	34.29	35.54
	சி.	நடப்பு வரி ஆஸ்திகள் (நிகரம்)	20.30	34.70
	டி.	இதர நடப்பு ஆஸ்திகள்		
		மொத்த ஆஸ்திகள்	**1592.74**	**1612.23**
		ஈக்விடி மற்றும் பொறுப்புகள்		
		ஈக்விடி		
	ஏ.	ஈக்விடி பங்கு மூலதனம்	576.28	576.28
	பி.	இதர ஈக்விடி	(813.23)	(845.64)
		பொறுப்புகள்		
1.		நடப்பு சாரா பொறுப்புகள்		
	ஏ.	நிதி பொறுப்புகள்		
		i) கடன்கள்	1,197.71	1,129.78
	பி.	இதர நடப்பு சாரா பொறுப்புகள்	397.85	398.70
	சி.	ஒதுக்கீடுகள்		
2.		நடப்பு பொறுப்புகள்		
	ஏ.	நிதி பொறுப்புகள்		
		i) வர்த்தகம் செலுத்தல்	2.31	7.41
		ii) இதர நிதி பொறுப்புகள்	231.82	345.70
	பி.	இதர நடப்பு பொறுப்புகள்	–	–
	சி.	ஒதுக்கீடுகள்	–	–
		மொத்தம் சமம் மற்றும் பொறுப்புகள்	**1592.74**	**1612.23**

இடம் : சேலம்
தேதி: 24.07.2020

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக
நிர்வாக இயக்குனர்

ப்ரித்வி எக்சேஞ்ச் (இந்தியா) லிமிடெட்

(முந்தைய பெயர் ப்ரித்வி சாப்ட்டெக் லிமிடெட்)

CIN: L30006TN1995PLC031931

பதிவு அலுவலகம்: ஜீ ஜீ யுனிவர்சல், 2வது மாடி, கதவு எண்.2, மெக் நிக்லோஸ் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600 031.

31 மார்ச் 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கையான நிதிநிலை முடிவுகள்

(ரூ.லட்சத்தில்)

வ எ ண்		விவரங்கள்	31.03.2020ல் முடிந்த காலாண்டு தணிக்கை யானது	31.12.2019ல் முடிந்த காலாண்டு தணிக்கை யாகாதது	31.03.2019ல் முடிந்த காலாண்டு தணிக்கை யானது	31.03.2020ல் முடிந்த ஆண்டு தணிக்கை யானது	31.03.2019ல் முடிந்த ஆண்டு தணிக்கை யானது
1.		செயல்பாடுகள் மூலம் வருமானம்					
	ஏ)	செயல்பாடுகள் மூலம் வருமானம்	189.98	264.58	237.27	1,000.71	1,011.78
	பி)	இதர வருமானம்	44.67	24.90	27.62	110.55	83.20
		மொத்த வருமானம்	234.65	289.48	264.89	1,111.26	1,094.98
2		செலவுகள்					
	ஏ)	ஊழியர் நல செலவுகள்	127.23	115.04	121.00	469.88	407.39
	பி)	நிதி கட்டணம்	2.03	3.82	0.35	11.57	3.22
	சி)	தேய்மானம்	4.92	4.83	4.79	19.30	18.20
	டி)	இதர செலவுகள்	83.48	95.49	73.24	326.54	277.66
		மொத்த செலவுகள்	217.66	219.18	199.38	827.29	706.47
3.		வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன் லாபம்/நஷ்டம் (1–2)	16.99	70.30	65.51	283.97	388.51
4.		விலக்கு அயிட்டங்கள்	––	––	––	––	––
5.		வரிக்கு முன் லாபம் (3–4)	16.99	70.30	65.51	283.97	388.51
6.		வரி செலவுகள்	16.36	14.00	51.45	78.36	144.45
7.		காலாண்டு /ஆண்டுக்கான லாபம் / நஷ்டம் (5–6)	0.63	56.30	14.06	205.61	244.06
8.		இதர விரிவான வருமானம் (நிகர வரி)	(11.67)	(2.76)	(3.96)	(25.42)	(25.77)
9.		மொத்த விரிவான வருமானம்	(11.04)	53.54	10.10	180.19	218.29
10.		செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ. 10)	824.97	824.97	549.98	824.97	549.98
11		இதர ஈக்விடி	1,923.22	1,934.27	2,067.75	1,923.22	2,067.75
12		ஒரு பங்கு சம்பாத்தியம் (விலக்கு அயிட்டங்களுக்கு முன்) (வருடாந்திரம் அல்ல)					
	(ஏ)	அடிப்படை	(0.13)	0.65	0.18	2.18	3.97
	(பி)	டைலூட்டட்	(0.13)	0.65	0.18	2.18	3.97

குறிப்பு:
1) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான தணிக்கையான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான தணிக்கையான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சு இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.prithvifx.comல் உள்ளது.
2) மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு 25.07.2020 அன்று நடந்த இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவுக் குறிப்பு செய்யப்பட்டது.
3) 31.03.2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதி முடிவுகள் குறித்து சட்ட தணிக்கையாளர்கள் தகுதியற்ற கருத்தை வெளியிட்டுள்ளனர்.
4) கம்பெனி ஒரு பகுதியாக அதாவது ‘‘அன்னிய செலாவணி’’ என்ற பகுதியாக செயல்படுகிறது. எனவே, ஒரே ஒரு பகுதி அறிக்கையாக உள்ளது.
5) கோவிட் – 19 தொற்று பரவல் மற்றும் அதனைத் தொடர்ந்து போடப்பட்ட ஊரடங்கு ஆகியவற்றின் காரணமாக கம்பெனியின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. கம்பெனி தேவையான அனுமதியை பெற்று அதன் செயல்பாடுகளை அனைத்து கிளைகளிலும் துவக்கி உள்ளது. கடனாளிகள், இருப்பு போன்ற சொத்துக்களை மீட்டெடுப்பதையும் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது, மேலும் அதன் சொத்துக்களுக்கான தொகையும் மீட்டெடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கிறது.
6) பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் ஒரு பங்கிற்கு தலா 2.5% இறுதி ஈவுத்தொகையை இயக்குநர்கள் குழு பரிந்துரைத்துள்ளது.
7) கடந்த காலாண்டு/ஆண்டிற்கான கணக்குகள் ரீகுரூப் செய்யப்பட்டு/மறுசீரமைக்கப்பட்டு மற்றும் மறுவகைப்படுத்தப்பட்டு எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் நடப்பு காலாண்டு/ஆண்டுக்கான கணக்குகள் மறுவகைப்படுத்தப்பட்டு/வெளியிடப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழு சார்பாக
ஒப்பம்/– பவன் குமார் கவாத்
(முழு நேர இயக்குனர்)
(DIN :07095542)

இடம்: சென்னை
தேதி: 25 ஜூலை, 2020

Tamilnadu Petroproducts Limited

Regd.Office & Factory: Manali Express Highway, Manali, Chennai 600 068.
CIN: L23200TN1984PLC010931
Telefax: 044-25945588
Website: www.tnpetro.com
E-mail: secy-legal@tnpetro.com

NOTICE

Pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, notice is hereby given that a meeting of the Board of Directors of the Company will be held on Tuesday, the 4th August, 2020, inter alia to consider and approve, the Unaudited Financial Results for the quarter ended 30th June, 2020.

For Tamilnadu Petroproducts Limited

K.Priya
Company Secretary & Compliance Officer

Date : 27.07.2020
Place : Chennai

Further details are available in websites of the BSE and NSE, www.bseindia.com and www.nseindia.com and also in the website of the Company viz www.tnpetro.com.

matrimony.com

மேட்ரிமோனி.காம் லிமிடெட்

CIN: L63090TN2001PLC047432

பதிவு அலுவலகம்/ நிறுவன அலுவலகம்: 94, டிவிஹெச் பெலிசியா டவர்ஸ், டவர் 2, 10 வது மாடி, எம்.ஆர்.சி. நகர், சென்னை-600028.

Tel:+91 44 3095 3095, +91 44 49001919

E-mail: investors@matrimony.com,

Website: www.matrimony.com

அறிவிப்பு

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 ன் விதி 29 மற்றும் 47 ன் படி, ஜூன் 30, 2020 ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளித்தல் உட்பட்ட அலுவல்களை மேற்கொள்ள கம்பெனியின் இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை, ஆகஸ்ட் 6, 2020 அன்று நிறுவன அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்த தகவல் கம்பெனியின் இணையத்தளம் www.matrimony.com மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையத்தளமான www.bseindia.com மற்றும் www.nseindia.com லும் உள்ளது.

மேட்ரிமோனி.காம் லிமிட்டெடுக்காக ஒப்பம்/-

இடம்: சென்னை **விஜய்ஆனந்த . எஸ்**
தேதி: 25-07-2020 **கம்பெனி செயலாளர்**